<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>

முன்னிலை :–திருமதி.P.கோபால அரசி, B.Sc.,B.L.,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26–ம் நாள் வெள்ளி கிழமை,

அசல் வழக்கு எண்.148/2013

CNR.No.TNTP17-000614-2013

–––––––––––––

1. செல்வராஜ்
2. மணிகண்டன் ... வாதிகள்

/எதிர்/

அ/மி மாரியம்மன் கோவில்,
அதன் நிர்வாக அலுவலர்
சமயபுரம். ... பிரதிவாதி

இவ்வழக்கானது 20.04.2013 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 18.09.2025 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ரமேஷ் நடராஜன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சியங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் ஆய்வின் கீழ் இருந்தும் வந்த, இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

தாவா A அட்டவணை சொத்தில் வாதிகள் அமைதியான முறையில் சுவாதீனம் இருந்து அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, எந்நாளும் எவ்வகையிலும், எக்காலத்திலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும்,

பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, எந்நாளும்

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:52:48 +0530

எவ்வகையிலும், எக்காலத்திலும் தாவா B அட்டவணை சொத்தை அலுவலக இடமாக மாற்றுவதையோ அல்லது நன்கொடை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதை தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும், வழக்கு செலவுத்தொகை கோரியும், வாதிகளால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) <u>வழக்குரை சுருக்கம்:–</u>

(1.1) தாவா A அட்டவணை சொத்து வாதிகளுக்கும், மற்றவர்களுக்கும் பாத்தியப்பட்டது. தாவா A, B அட்டவணை சொத்துக்களும், அதற்கு மேற்கு பகுதியில் இருக்கும் சொத்தும் ஆதியில் ஒரு பாப்பம்மாளுக்கு பாத்தியப்பட்டது. ஆதியில் தாவா சொத்தின் சர்வே எண்.106, அதன் மொத்த விஸ்தீரணம் 24 சென்ட் ஆகும். மேற்படி பிரதிவாதி கோவிலில் எட்டு குடும்பத்தை சோந்த நபர்கள் மிராசு பாத்தியத்தில் முடியெடுக்கும் தொழிலை செய்தும், நம்பிக்கையுடன் வழிப்பாடும் செய்து வருகின்றனர்.

(1.2) இந்தியாவிலேயே பிரசித்தி பெற்ற பிரதிவாதி கோவிலுக்கு பக்தர்கள் தங்களது முடியை காணிக்கையாக செலுத்துவது வழக்கம். நீண்ட நெடுங்காலமாக 16 குடும்பத்தை சேர்ந்த நாவிதர்கள் மட்டுமே, முடியெடுக்க அனுமதிக்கப்பட்டு, தற்பொழுதும் அவர்களின் குடும்ப நபர்கள் மட்டுமே மேற்படி தொழிலை செய்து வருகின்றனர். அது தொன்றுதொட்டு சுமார் 100 வருடங்களுக்கு மேலாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

(1.3) பிரதிவாதி கோவில் முடிகாணிக்கைக்காக பணம் பெற்றுக் கொண்டு தரும் சீட்டிற்குரிய பங்கு தொகையை 16 குடும்பத்தார் பிரித்து கொடுப்பது தொன்றுதொட்ட பழக்கமாகும். 21.05.1911 ல், 1ம் வாதியின் தாத்தா சின்னகண்ணு பண்டிதரும், அவரின் பங்காளிகளும் சேர்ந்து சொத்தை பாப்பம்மாளிடமிருந்து கிரையம் வாங்கினார். அதன் அசல் வாதிகள் கைவசம்

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:54:18 +0530

இல்லாததால் அதன் சான்றிட்ட நகலை வாதிகள் தாக்கல் செய்கின்றனர்.

(1.4) மேற்படி ஆவணம் பாப்பம்மாளால் எழுதி கொடுக்கப்பட்டு, தகுந்த சாட்சியங்கள் இடப்பட்டு, பதிவு செய்யப்பட்டது. மேற்படி இடத்திற்கு பட்டாவும், பாஸ்புத்தகமும் கொடுக்கப்பட்டுள்ளது. அதன் அசல் தற்சமயம் கையில் இல்லாததால் அதனை தருவிக்க வாதிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். பிரதிவாதி, கோவில் அலுவலர் வாதிகளின் தந்தையையும், பங்காளிகளையும் அணுகி வாதிகள் வாங்கிய இடத்தின் மேற்கு பக்கம் யானை கட்டுவதற்கு இடம் வேண்டும் என்று கேட்டதன் பேரில் அதற்கு அனுமதிக்கப்பட்டது. அந்த இடத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை.

(1.5) யானை கட்டும் இடத்திற்கு அடுத்த கிழக்கு பகுதி பூஜை சாமான்களை வைத்தும், வெந்நீர் போட்டு கொண்டும் வாதிகள் அனுபவத்தில் தான் உள்ளது. அதற்கு வரிவிதிப்பும் உள்ளது. அதை தான் வாதிகளுடைய பிராதில் A அட்டவணையாக காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி சின்னகண்ணு பண்டிதர் இறந்துவிட்டார். அவரது 2 மகன்களே காத்தான், ஓமாந்து ஆகியோர். மேற்படி காத்தானுடைய மகன் பொன்னனும் உயிருடன் இல்லை. மேற்படி பொன்னனின் 3 மகன்களாக தேவராயன், சின்னகண்ணு, காத்தலிங்கம் ஆகியோர் இறந்துவிட்டனர்.

(1.6) மேற்படி காத்தலிங்கத்தின் மகனின் வாரிசுகளான வாதிகள் மற்றும் மற்ற பங்குதாரர்களுக்கும் சேர்ந்தே இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளனர். பிரதிவாதி கோவிலை பெரிதுபடுத்த வாதிகளின் A அட்டவணை சொத்தை ஆக்கிரமிக்க வந்த போது வாதிகள் அதை தடுத்துவிட்டனர். A அட்டவணை சொத்தில் பிரதிவாதிகளுக்கு எந்தவிதமான உரிமையும், பாத்தியமும் கிடையாது.

(1.7) பிரதிவாதி தனது அந்தஸ்து, அரசு ஊழியர்கள், பெரும் செல்வந்தர்களை கொண்டு சொத்தை அபகரிக்க முயற்சிக்கிறார். மேற்படி இடத்திற்கு மின்சார இணைப்பு உள்ளது. தாவா B அட்டவணை சொத்தை பொறுத்து சில பங்குதாரர்கள் பிரதிவாதி கோவிலுக்கு 22.06.1977 ல் ஒரு

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:54:28 +0530

நன்கொடை ஆவணத்தை சில நிபந்தனைகளுடன் எழுதி கொடுத்தனர். அதன் அசல் பிரதிவாதி வசம் உள்ளதால், அதன் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(1.8) மேற்படி பத்திரத்தில் மேற்படி மனையில் சேவார்த்திகளுக்கு முடி எடுக்க மட்டுமே உபயோகிக்க வேண்டும் என்றும், மற்ற உபயோத்திற்கு உபயோகிக்க கூடாது என்றும் கண்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டே, மேற்படி நன்கொடையை பிரதிவாதி கோவில் நிர்வாகம் ஒப்புக்கொண்டது. மேற்படி இடம் B அட்டவணை சொத்தாகும். அந்த சொத்தை பிரதிவாதி கோவில் நிர்வாகத்திடம் ஒப்படைத்த பிறகு, அதில் கட்டிடம் கட்டி வாதிகள் முடியெடுக்கும் தொழிலை செய்து வந்தனர்.

(1.9) B அட்டவணை சொத்தை வேறு உபயோகத்திற்கு உபயோகிக்க பிரதிவாதிகளுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது. மேற்படி இடத்தை பிரதிவாதிகள் வேறு பயன்பாட்டிற்கு உபயோகிக்க போவதாக கூறி வருகின்றனர். அவ்வாறு செய்ய பிரதிவாதிகளுக்கு அதிகாரம் கிடையாது. அவ்வாறு அவர்கள் செய்தால் வாதிகளுக்கு மிகுந்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும்.

(1.10) அதனால் அவர் வழக்கு A அட்டவணை சொத்தில் வாதிகளின் அனுபவத்திற்கு எந்தவிதமான இடையூறும் செய்ய கூடாதென்றும், A அட்டவணை சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டியும் வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனவே வாதிகள் மேற்படி பத்திரத்தில் கண்டுள்ளவற்றை தவிர வேறு உபயோகத்திற்கு B அட்டவணை சொத்தை உபயோகிக்க கூடாது என்று B அட்டவணை சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

2) **<u>பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம் :–</u>**

(2.1) வாதிகளின் பிராதில் கண்ட விபரங்களில் இப்பிரதிவாதி

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:54:36 +0530

ஒத்துக்கொள்ளும் சங்கதியை தவிர, மற்ற சங்கதிகள் மறுக்கப்படுகிறது. அதனை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர். வழக்கு சட்டப்படிக்கும் பொருண்மைபடிக்கும் நிலைக்கத்தக்கதல்ல, வாதிகள் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல.

(2.2) வாதிகள் சொல்வது போல் தாவா A, B அட்டவணை சொத்துக்கள் வாதிகளின் முன்னோர்களின் கிரைய சொத்து என்பதையும், அது வாதிகளின் அனுபவத்திலும், உபயோகத்திலும் உள்ளது என்பதையும் திருக்கோயில் ஏற்றுக்கொள்ளவில்லை. 22.06.1977 ல் தாவா B அட்டவணை சொத்தை திருக்கோயில் நிபந்தனைகளுடன் தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்ததாகவும், அதனை திருக்கோயில் ஏற்றுக்கொண்டதாகவும், சொல்வது மறுக்கப்படுகிறது.

(2.3) ஆதியில் எஸ்.கண்ணனூர் கிராமத்தில் புல எண்.106/2 ல் 29 செண்ட் சொத்து சின்னக்கண்ணு, ஏகாம்பரம், செங்கையன் மற்றும் பாப்பு ஆகியோருக்கு 21.04.1911 தேதிய கிரைய ஆவணப்படி பாத்தியப்பட்டது. பின்னிட்டு மேற்படியார்களின் வாரிசுகளான காத்தான் பண்டிதன், ரெங்கசாமி பண்டிதன் மற்றும் செங்கையா பண்டிதன் ஆகியோர் 28.02.1931 ல் அதனை பதிவு டிரான்ஸ்பர் பத்திரத்தின் மூலம் அருள்மிகு மாரியம்மன் திருகோவிலுக்கு பாத்தியப்படுத்தி, அதன் அனுபவத்தில் விட்டுவிட்டனர்.

(2.4) மேற்படி ஆவணம் சட்டப்படி ஏற்படுத்தப்பட்டு, சாட்சியமிடப்பட்டு ஆவண எண்.339/1931 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் அசல் திருக்கோவில் வசம் மிகவும் நசிந்த நிலையில் உள்ளதால், அதன் பதிவு நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அது முதல் மேற்படி 29 செண்ட் சொத்து முழுவதும் திருக்கோவில் அனுபவத்தில் இருந்து வருகிறது. எனவே அதன்பின் வாதிகளுக்கோ, வேறு நபர்களுக்கோ தாவா சொத்துக்களில் எந்தவித பாத்தியமும் உரிமையும் இல்லை.

(2.5) இந்நிலையில் தாவா B அட்டவணை சொத்தை 22.06.1977 ல் தான

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:54:44 +0530

செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்க எவருக்கும் பாத்தியம் இல்லை. எனவே மேற்படி ஆவணத்தின்படி நிபந்தனையுடன் திருகோவிலுக்கு கொடுத்ததாக மேற்சொன்ன விபரங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இந்து சமய அறநிலையத்துறை சட்டம், தமிழ்நாடு சட்டம், 1959, 2/1971ன் படி திருக்கோவில்களில் எவருக்கும் மிராசு பாத்தியம் கிடையாது, அவை ரத்து செய்யப்பட்டு சட்ட திருத்தம் ஏற்பட்டுள்ளது.

(2.6) அதன்படி திருக்கோவில்களில் பரம்பரை பாத்தியத்தின் அடிப்படையிலோ, மிராசு பாத்தியத்தின் அடிப்படையிலோ எவரும் உரிமைக் கொண்டாட முடியாது. மேலும், வாதி செல்வராஜ் திருச்சி, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் முன்பாக தாக்கல் செய்த அசல் மனு எண்.5/2009ல், தங்கள் வகையறா குடும்பங்களுக்கு முடி எடுக்கும் உரிமை பழக்கவழக்கத்தின் படி சித்தித்துள்ளது என வழக்கு செய்து, மனு விசாரிக்கப்பட்டு முடி எடுக்கும் உரிமை வாதி வகையறாக்களுக்கு கிடையாது என தீர்ப்பாகி மனு தள்ளுபடி ஆகியுள்ளது.

(2.7) மேற்படி தீர்ப்பின் மீது வாதி செல்வராஜ் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் முன்பாக மேல்முறையீடு செய்துள்ளார். முன்பு தாவா சொத்துக்களில் ஒரு பகுதி பக்தர்களுக்கு முடி எடுக்கும் இடமாக உபயோக்கப்பட்டு வந்தது. தற்போது திருக்கோவிலுக்கு முடி எடுக்கும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்து, இடம் போதுமானதாக இல்லாததால், திருக்கோவிலின் வேறு பகுதியில் புதிதாக பெரிய கட்டிடம் கட்டி அதனை முடி மண்டபமாக உபயோகித்து வருகின்றனர்.

(2.8) தாவா சொத்துக்களில் உள்ள இரு கட்டிடங்கள் உபயோகத்தில் இல்லாத காரணத்தால் எந்த நேரத்திலும், இடிந்துவிழும் நிலையில் உள்ளன. திருக்கோவிலுக்கு வரும் பக்தர்கள் மீது விழுந்து அவர்கள் பாதிக்கப்படுவார்களோ என அச்சமாக உள்ளது. பாதுகாப்பு கருதி கட்டிடங்களை அப்புறப்படுத்த திருக்கோவில் நிர்வாகம் நடடிக்கை எடுத்து வருகிறது.

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:54:53 +0530

(2.9) A அட்டவணை சொத்தில் வாதிகளுக்கு பாத்தியம் இல்லை என்பதாலும் பிரதிவாதி/திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதாலும் வாதிகள் கோரும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. வாதிகளின் உரிமை மறுக்கப்படும் போது விளம்புகை பரிகாரம் கேட்காமல் உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் வாதிகள் கேட்டுள்ளதால் தாவா நிலைநிற்கத்தக்கதல்ல.

(2.10) B அட்டவணை சொத்து பிரதிவாதி/திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்பதால் B அட்டவணை சொத்தை பிரதிவாதி/திருக்கோவில் அலுவலகமாகவோ, அல்லது வேறு உபயோகத்திற்கோ உபயோகப்படுத்தக்கூடாது என கேட்பதற்கு வாதிகளுக்கு உரிமை இல்லை. எனவே வாதிகளின் வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்வழக்குரையும், கூடுதல் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **இரு தரப்பு வாதுரைகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.**

எழுவினாக்கள் :

1.	தாவா A அட்டவணைச் சொத்து வாதிகள் அனுபவத்தில் உள்ளது என்பது சரியா?
2.	தாவா A அட்டவணைச் சொத்தைப் பொறுத்து வாதிகள் கோரியபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
3.	தாவா B அட்டவணைச் சொத்தைப் பொறுத்து 22.06.1977 தேதியில் நிபந்தனையுடன் கூடிய தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தியுள்ளனர் என்பது சரியா?
4.	தாவா B அட்டவணைச் சொத்தை 22.06.1977 தேதிய தான பத்திரத்தில் குறிப்பிட்ட நோக்கத்தைத் தவிர வேறு நோக்கத்திற்கு பயன்படுத்த கூடாது என வாதிகள் கோரியபடி நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
5.	செலவுத்தொகையும், இதர பரிகாரமும் என்ன?

P GOPALA ARASI Digitally signed by P GOPALA ARASI Date: 2025.09.26 18:55:00 +0530

4. **சாட்சியங்கள்:-**

(4.1) வாதிகள் தரப்பில் 1ம் வாதி, வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர்மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில், பிரதிவாதி கோவிலின் எழுத்தர் (ரெங்கநாதன்) பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பி.சா.1ன் மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யவில்லை.

(4.2) மேலும் பிரதிவாதி தரப்பில், திரு.பாபு, இளநிலை உதவியாளர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் சமயபுரம் பி.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, பி.சா.2ன் மூலம் பி.சா.ஆ.1 ஆவணமும், வாதி தரப்பு குறுக்கு விசாரணையின் போது வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. **எழுவினாக்கள் 1 முதல் 4 ற்கான தீர்வு :**

(5.1) தாவா சொத்துக்களை வாதிகளின் மூதாதையர்கள், பாப்பம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்று அதில் தங்களது குடும்பத்தை சோந்த நபர்கள் மிராசு பாத்தியத்தில் முடியெடுக்கும் தொழிலை தொன்று தொட்டு செய்து வருவதாகவும், இந்நிலையில் முடி காணிக்கை செலுத்தும் பக்தர்களுக்கு இடம் வேண்டி, தாவா B அட்டவணை சொத்தை கொடுக்குமாறு பிரதிவாதி கோயில் கேட்டுக்கொண்டதால், அதன் சில பங்குதாரர்கள் சில நிபந்தனைகளுடன் பிரதிவாதி கோவிலின் ஒப்புதலுடன் நன்கொடை ஆவணத்தை ஏற்படுத்திக்கொடுத்ததாகவும், தற்போது பிரதிவாதி கோயில் வேறு நோக்கத்திற்காக அதனை பயன்படுத்த முயற்சிப்பதாகவும், ஆனால் அவ்வாறு உபயோகிக்க கூடாது என்பதும் வாதிகளின் வழக்காகும்.

(5.2) இவ்வழக்கில், S.கண்ணனூர் கிராம சர்வே எண்.106/2ல் உள்ள 24 செண்ட் நிலத்தில், தெற்கு ரத வீதிக்கு தெற்கே, பெருவள வாய்க்காலுக்கு வடக்கே, B அட்டவணை சொத்திற்கு மேற்கே, யானை மண்டபத்திற்கு கிழக்கே,

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:55:08 +0530

மேற்படி நான்கெல்லைக்குட்பட்ட கிழமேல் 51 அடி, தென்வடல் 65 அடி உள்ள இடமும், அதிலுள்ள கட்டிடங்களும் A அட்டவணை சொத்தாக காட்டப்பட்டுள்ளது.

(5.3) மேற்படி கிராமம், மேற்படி புல எண்ணில் உள்ள 24 சென்ட் நிலத்தில், தெற்கு ரத வீதிக்கு தெற்கு, வாதிக்கும், பிறருக்கு சொந்தமான சொத்திற்கு கிழக்கு, சுப்பிரமணியசாமி கோயிலுக்கு மேற்கு, பெருவள வாய்க்கால் வடக்கு, மேற்படி நான்கெல்லைக்குட்பட்ட கிழமேல் 95 அடி, தென்வடல் 65 அடி உள்ள இடமும், அதிலுள்ள மாடி கட்டிடங்களும் B அட்டவணை சொத்தாகவும் காட்டப்பட்டுள்ளது.

(5.4) வாதிகள் தரப்பிற்கு ஆதரவாக, 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தாவா சொத்தை பொறுத்த மாதிரி வரைபடம் வா.சா.ஆ.1 ஆகும். **வா.சா.ஆ.1** பிராது மாதிரி வரைபடத்தில் தெற்கு ரத வீதிக்கு தெற்கு, சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு மேற்கு, பெருவள வாய்க்காலுக்கு வடக்கு, யானை மண்டபத்திற்கு கிழக்கு, இதற்குட்பட்ட A, B அட்டவணை சொத்துக்கள் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது.

(5.5) மேலும் வா.சா.ஆ.1ல் A அட்டவணை சொத்து மேற்கிலும், B அட்டவணை சொத்து கிழக்கிலும் உள்ளதாகவும், மேற்படி சொத்துக்களில் தென்வடல் அளவுகள் 65 என்றும், A அட்டவணை சொத்தின் கிழமேல் 51 என்றும், B அட்டவணை சொத்தின் கிழமேல் 95 என்றும், காட்டப்பட்டுள்ளது. 29.05.1911ம் தேதிய கிரைய ஆவணம் வா.சா.ஆ.2 ஐ ஆராய்கையில், பாப்பம்மாள் என்பவர் துறையூரில் இருக்கும் ஓமாந்துர் பரியாரி நாவிதர்களான சின்னகண்ணு, காமாட்சி, செங்காயன், பாப்பு ஆகியோருக்கு கிரையம் கொடுத்துள்ளதாக காட்டப்பட்டுள்ளது.

(5.6) **வா.சா.ஆ.2** ல், தபசிலாக ஓமாந்தூர் கிராமம், சர்வே எண்.106 ல்

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:55:15 +0530

தோரோடும் வீதிக்கு தெற்கு, பெருவிளை வாய்க்காலுக்கு வடக்கு, அப்பாவு முதலி தென்னந்தோப்புக்கு கிழக்கு, சர்க்கார் சாவடிக்கு மேற்கு, இதற்குட்பட்ட 24 டிசமல் மாமரத்துத் தோட்டம் நிலத்தையும், இதன் தென்புறம் சர்வே எண்.118 ல் பெருவிளை வாய்க்கால் புறம்போக்கில் தன் பேரால் மரபட்டா ஏற்பட்டிருக்கிற 11 தென்னை மரங்களும், காட்டப்பட்டுள்ளன.

(5.7) மேற்படி **வா.சா.ஆ.3 ஐ** ஆராய்கையில் 21.06.2012 தேதியில் கதவு எண்கள்.1, 1-1, 1-2 கட்டிடங்களுக்கான 2012 - 2013 ஆண்டிற்குரிய வீட்டுவரி ரசீதுகள் V.துறையூர், S.கண்ணனூர் மிராஸ் நாவிதர்கள் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் வா.சா.ஆ.3 ல் மேற்படி கதவு எண்.1 ற்கு வரிவிதிப்பு எண்.235, கதவு எண்.1-1 ற்கு வரிவிதிப்பு எண்.236, கதவு எண்.1-2 ற்கு வரிவிதிப்பு எண்.237 என்றும் காட்டப்பட்டுள்ளது.

(5.8) மேலும் 17.06.2013 எஸ். கண்ணனூர் பஞ்சாயத்து செயல் அலுவலர் அனுப்பிய **வா.சா.ஆ.4** அறிவிப்பு வே.துறையூர் - எஸ். கண்ணனூர் மிராஸ் நாவிதர்கள் தெற்கு ரத வீதி என்ற முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி **வா.சா.ஆ.5, வா.சா.ஆ.6 ஐ** ஆராய்கையில் மின் இணைப்பு எண்.268-009-1655 ற்கான மின் கட்டண அட்டை மற்றும் 27.06.2011, 11.07.2012, 28.02.2012 ஆகிய தேதிகளில் மின் கட்டண ரசீதுகள் ஆகியவை மிராஸ் நாவிதர்கள் பெயரில் உள்ளது என்பதை அறியமுடிகிறது.

(5.9) 22.06.1977 தேதிய நன்கொடை ஆவணம் **வா.சா.ஆ.7** ஐ ஆராய்கையில், எஸ்.கண்ணனூர் கிராமத்தில் உள்ள ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதசுவாமி வகையறா தேவஸ்தானத்தை சேர்ந்த சமயபுரம் ஸ்ரீமாரியம்மன் கோவில் ஆலய பரம்பரை மிராசு நாவிதர்கள் 11 பேரும், மேற்படி ஆலய பரம்பரை நாவிதர்கள் மிராசு பாத்தியங்கள் நாவிதர்களின் பிரதிநிதிகளாகவும் இருந்து, சமயபுரம் ஸ்ரீ மாரியம்மனுக்கு, மேற்படி ஆலய எக்ஸ்கியூட்டிவ் ஆபீசார் அவர்கள் மூலமாக தானமாக கொடுப்பதாக காட்டப்பட்டுள்ளது.

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:55:22 +0530

(5.10) மேலும் **வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9** அழைப்பிதழ்களை ஆராய்கையில், சமயபுரம், அருள்மிகு. மாரியம்மன் திருக்கோயில் பஞ்சபிரகார திருவிழாவிற்கான 2017 மற்றும் 2018 ஆண்டிற்கான அழைப்பிதழ்கள் என அறியமுடிகிறது. 12.04.2002ல் இந்து சமய அறநிலைய துறை இணை ஆணையர் அசல் மனு எண்.32/2001ல் இ.ம.எண். 2/2002ல் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்பதை **வா.சா.ஆ.10** மூலமாக அறியமுடிகிறது.

(5.11) மேலும் வா.சா.ஆ.10ல் மனுதாரர் காத்தலிங்கம் என்றும், மேற்படி பிரதிவாதி திருக்கோயில், M.சுப்பிரமணியன், K.சக்திவேல் ஆகியோருக்கு எதிராக மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளதாக காட்டப்பட்டுள்ளது. திருச்சி சார்பு நீதிமன்ற அ.வ.எண்.72/1986 வழக்கின் 29.10.1986ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை **வா.சா.ஆ.11** ஆகும். மேற்படி வழக்கில் இப்பிரதிவாதி திருக்கோவில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை **வா.சா.ஆ.12** ஆகும்.

(5.12) மேற்படி **வா.சா.ஆ.13 ஐ** ஆராய்கையில் 21.06.2012 தேதியில் கதவு எண்கள்.1, 1/1, 1/2 ஆகியவற்றிற்கான, 2023 – 2024 ஆண்டுகளுக்குரிய சொத்துவரி ரசீதுகளில் V.துறையூர், S.கண்ணனூர் மிராஸ் நாவிதர்கள் பெயருக்கு செலுத்தப்பட்டுள்ளது. எனவே வா.சா.1 சாட்சியம் மற்றும் வா.சா.ஆ–1 முதல் 13 வரையிலான சான்றாவணங்கள் மூலம் வாதிகள் தங்களது தரப்பை நிரூபித்துள்ளதாக கூறியுள்ளனர்.

(5.13) ஆனால் பிரதிவாதி கோயில் தரப்பில் வாதிகளின் வழக்கை மறுத்துள்ளனர். பிரதிவாதி கோயில் தரப்பிற்கு ஆதரவாக, பிரதிவாதி கோவிலின் எழுத்தர் திரு.ரெங்கநாதன் பி.சா.1 ஆகவும், இளநிலை உதவியாளர் திரு.பாபு பி.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, பி.சா.2ன் மூலம் 28.02.1931ம் தேதியிட்ட உரிமை மாற்று ஆவணம் (Transfer deed) ஸ்ரீரங்கம் சார்பதிவக ஆவண எண்.339/1931 **பி.சா.ஆ.1** ஆகவும், குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(5.14) இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் முதலில் கூறியுள்ளது போல 21.05.1911ல், 1ம் வாதியின் தாத்தா சின்னகண்ணு பண்டிதரும், அவரின்

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:55:28 +0530

பங்காளிகளும் சேர்ந்து வழக்கு சொத்து உள்ள புல எண்.106 ல் உள்ள 24 செண்ட் சொத்தை பாப்பம்மாளிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளனர் என்பதை வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் மூலம் அறிய முடிகிறது.

(5.15) மேலும் வாதிகள் தரப்பில், பிரதிவாதி, வாதிகளின் தந்தையையும், பங்காளிகளையும் அணுகி வாதிகள் வாங்கிய இடத்தின் மேற்கு பக்கம் யானை கட்டுவதற்கு இடம் வேண்டும் என்று கேட்டதன் பேரில் அதற்கு அனுமதிக்கப்பட்டதாகவும், வாதிகளின் பிராது மாதிரி வரைபடத்தின் படி மேற்படி இடத்திலும், அதற்கு கிழக்கே உள்ள இடத்திலும் உள்ள மேற்கூரைக்கான வாரி விதிப்பு மேற்படி நாவிதர்கள் பெயரில் உள்ளதாகவும் கூறியுள்ளனர்.

(5.16) அதனை பி.சா.1 ம் தனது சாட்சியத்தில், தெற்கு ரதவீதியில் முதலில் காவல் நிலையமும், அடுத்து யானை கட்டும் இடமும், அதை அடுத்து நாவிதர்களுக்கு உரிய இடமும், அடுத்து முடிகாணிக்கை செலுத்தும் மண்டபம், அதனை அடுத்து முருகன் கோவில் உள்ளது என்றால் சரிதான் என்றும், மேற்படி கதவு எண்.1, 1/1, 1/2 தீர்வை ரசீதுகள் மேற்படி மேற்கூரைக்குரியது என்றும், மேற்படி ரசீதுகள் V.துறையூர், S.கண்ணனூர் மிராஸ் நாவிதர்கள் பெயரில் உள்ளது என்றும் ஏற்றுக்கொண்டுள்ளார். மேற்படி வரி ரசீதுகள் பி.சா.1 மூலமே **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(5.17) எனவே வா.சா.ஆ.1 பிராது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள யானை மண்டபம், அதற்கு கிழக்கே உள்ள நாவிதர்களுக்கு உரிய இடமான வழக்கு A அட்டவணை சொத்து, அதற்குஅடுத்து கிழக்கே உள்ள முடிகாணிக்கை செலுத்தும் மண்டபமான வழக்கு B அட்டவணை சொத்து ஆகியவற்றின் மேற்கூரையில் கதவு எண்கள்.1, 1/1, 1/2 என்பதும், அதற்கான ரசீதுகள் நாவிதர்கள் பெயரில் உள்ளது என்பதும் தெளிவாகிறது.

(5.18) மேலும் வாதிகள் தரப்பில், 1911 ம் ஆண்டு கிரைய ஆவணம் வா.சா.ஆ.2 ல் கிரையம் பெற்றவர்களான சின்னகண்ணு நாவிதரின் வாரிசுகள் தான் வாதிகள் என்றும், மேற்படி சின்னகண்ணு நாவிதர் காலமாகிவிட்டதாகவும்

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:55:36 +0530

கூறியுள்ளனர். ஆனால் அதற்கு ஆதரவாக வாதிகள் தரப்பில் எவ்வித இறப்பு சான்றிதழ்களோ, வாரிசு சான்றிதழ்களோ, தாக்கல் செய்யப்படவில்லை.

(5.19) இருப்பினும் பிரதிவாதி தரப்பில் வாதிகள் மேற்படி சின்னகண்ணு நாவிதரின் வாரிசுகள் அல்ல என்று குறிப்பாக மறுக்கவில்லை. மேலும் புல எண்.106/2 ல் 29 செண்ட் சொத்து சின்னக்கண்ணு, ஏகாம்பரம், செங்கையன் மற்றும் பாப்பு ஆகியோருக்கு 21.04.1911 தேதிய கிரைய ஆவணப்படி பாத்தியப்பட்டதாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

(5.20) ஆனால் அதற்கு பின்னிட்டு மேற்படியார்களின் வாரிசுகளான காத்தான், பண்டிதன், ரெங்கசாமி பண்டிதன் மற்றும் செங்கையா பண்டிதன் ஆகியோர் 28.02.1931 ல் அதனை பதிவு டிரான்ஸ்பர் பத்திரத்தின் மூலம் அருள்மிகு மாரியம்மன் திருகோவிலுக்கு பாத்தியப்படுத்தி, அதன் அனுபவத்தில் விட்டுவிட்டதாக கூறி மேற்படி 28.02.1931 தேதிய ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளனர். அதுவே பி.சா.ஆ.1 ஆவணமாகும்.

(5.21) இந்நிலையில் வாதிகள் தரப்பில் மேற்படி 1931 ஆண்டு ஆவணம் எழுதி கொடுக்கப்படவும் இல்லை, அது நடைமுறைக்கு வரவும் இல்லை என்றும், அதனால் தான் அசலை பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றும் மறுக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஆராய்கையில், பிரதிவாதியின் எதிர்வழக்குரையில், பி.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் திருக்கோவில் வசம் மிகவும் நசிந்த நிலையில் உள்ளதால், அதன் பதிவு நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

(5.22) மேலும் இந்து சமய அறநிலையத்துறை சட்டம் பிரிவுகள் 29, 30, 31 ஆகியவை மேற்படி சட்டத்தின்கீழ் கோயில் அமைப்புகளுக்கான சொத்துக்களை பொறுத்து எவ்வாறு சொத்துக்களின் பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும் என்றும், அதில் உரிமை மூல ஆவணங்கள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களின் விவரங்கள் இருக்க வேண்டும் என்றும், அதனை மேற்படி துறையின் இணை ஆணையர் வருடாந்திர ஆய்வு செய்து அதனை

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:55:45 +0530

ஆணையருக்கு சமர்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

(5.23) இவ்வழக்கில் பி.சா.2 தனது சாட்சியத்தில், பிரதிவாதி திருக்கோவிலின் சொத்து பதிவேட்டில் வழக்கு சொத்து உள்ளதாகவும், அதில் புல எண் விஸ்தீரணம் எவ்வாறு உபயோகம் ஆகிய விபரங்கள் உள்ளதாகவும், ஆனால் எவ்வாறு கிடைத்தது என்ற விபரம் இல்லை என்றும், பி.சா.ஆ.1ன் அசல் ஆவணம் தற்போது தங்கள் வசம் இல்லை என்றும், தனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பி.சா.ஆ.1 ன் அசல் ஆவணம் இருப்பதாகவும், நலிந்த நிலையில் இருப்பதாக நான் கூறியுள்ளது தவறு என்றால் சரிதான் என்றும், கூறியுள்ளார்.

(5.24) மேலும் பி.சா.2 தனது சாட்சியத்தில், பி.சா.ஆ.1 உரிமைமாற்று ஆவணத்தை ஏற்படுத்தி கொடுத்த நபருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று பி.சா.ஆ.1ல் குறிப்பிடப்படவில்லை என்றும் கூறியுள்ளார். பிரதிவாதி தரப்பில் பி.சா.ஆ.1ஐ மேற்படி நபர்கள் 1911ம் ஆண்டு கிரைய ஆவணத்தின் அடிப்படையில் ஏற்படுத்தியுள்ளதாக கூறியுள்ள போதிலும், பி.சா.ஆ.1ல் மேற்படி 1911ம் ஆண்டு கிரைய ஆவணம் அதாவது வா.சா.அ.2 பற்றி குறிப்பிடப்படவில்லை. ஆனால் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.7 நன்கொடை ஆவணத்தில் வா.சா.அ.2 பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

(5.25) மேலும் பி.சா.1 தனது சாட்சியத்தில், பிரதிவாதி திருகோவில் அலுவலக கோப்பில் பி.சா.ஆ.1 ஆவணத்தில் நகல் உள்ளதாகவும், இந்நிலையில் பி.சா.ஆ.1 ஆவணம் மேற்படி 1911ம் ஆண்டு கிரைய ஆவணத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அலுவலக கோப்பை பார்த்து கூறுவதாகவும், அதுபோல வா.சா.ஆ.7 ஆவணமும் தங்களது அலுவலக கோப்பில் உள்ளதாகவும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

(5.26) இந்நிலையில் இந்திய சாட்சிய சட்டம், பிரிவு 64ன்படி ஒரு ஆவணத்தை அதன் அசலை கொண்டே நிரூபிக்க வேண்டும் என்றும், இரண்டாம் நிலை சாட்சியமான பி.சா.ஆ.1 ஆவணத்தின் நகலை

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:55:53 +0530

ஏற்றுக்கொள்ளும் முன்பு, மேற்படி சட்டம் பிரிவு 65ன் உள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் மட்டுமே இரண்டாம் நிலை சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் வாதம் முன்வைக்கப்பட்டு, கீழ்கண்ட மாண்புமிகு இந்திய உச்சநீதிமன்ற வழக்கு மேற்கோள் காட்டடப்பட்டது.

IN THE SUPREME COURT OF INDIA, Civil Appeal No.2060 of 2007 dated 19.04.2007, J.Yashoda Vs. K.Shobha Rani, 2007 -3- L.W.1066

…..Section 65 deals with the proof of the contents of the documents tendered in evidence. In order to enable a party to produce secondary evidence it is necessary for the party to prove existence and execution of the original document. Under Section 64, documents are to be provided by primary evidence. Section 65 however permits secondary evidence to be given of the existence, condition or contents of documents under the circumstances mentioned. The conditions laid down in the said section must be fulfilled before secondary evidence can be admitted. Secondary evidence of the contents of a document cannot be admitted with out non-production of the original being first accounted for in such a manner as to bring it within one or other of the cases provided for in the Section.

(5.27) எனவே இவ்வழக்கிலும் பிரதிவாதி தனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பி.சா.ஆ.1 ன் அசல் ஆவணம் இருப்பதாகவும், நலிந்த நிலையில் இருப்பதாக நான் கூறிவிட்டு, பின்னிட்டு மேற்படி கூற்று தவறு என்றும், அதன் அசல் ஆவணம் தற்போது தங்கள் வசம் இல்லை என்றும் முன்னுக்கு பின் முரணாக கூறியுள்ள நிலையிலும், பி.சா.ஆ.1ல் கண்ட சொத்தை பொறுத்தே மீண்டும் வா.சா.ஆ.7 நன்கொடை ஆவணம் பிரதிவாதி திருக்கோவிலால் பெறப்பட்டுள்ள நிலையிலும், பி.சா.ஆ.1 ஆவணத்தின் பதிவு உள்ளதாக கூறப்படும் திருகோவில் சொத்து பதிவேடு தாக்கல் செய்யப்படாத நிலையிலும், பி.சா.ஆ.1ன் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யமால் அதன் நகலை மட்டும் தாக்கல் செய்துள்ளது ஏற்றுகொள்ளத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(5.28) மேலும் வாதிகள் தரப்பில், வா.சா.ஆ.7 நன்கொடை ஆவணத்தில் பிரதிவாதி கோவில் தபசிலில் கண்ட மேற்படி மனையை சேவார்த்திகளுக்கு முடி

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:56:02 +0530

எடுக்க மட்டுமே உபயோகிக்க வேண்டும் என்றும், மற்ற உபயோத்திற்கு உபயோகிக்க கூடாது என்றும் கண்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டே, மேற்படி நன்கொடையை பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டதாக கூறியுள்ளனர்.

(5.29) இது குறித்து வா.சா.ஆ.7 நன்கொடை ஆவணத்தை ஆராய்கையில், மேற்படி 11 நபர்கள் மற்றும் மேற்படி ஆலய பரம்பரை நாவிதர்கள் மிராஸ் பாத்தியமுள்ள நாவிதர்களின் பிரதிநிதியாகவும், தங்களது முன்னோர்களால் ஸ்ரீரங்கம் சார்பதிவக ஆவண எண்.1343 படி 29.05.1911ம் ஆண்டு கிரையத்திற்கு (வா.சா.ஆ.2) வாங்கி அனுபவித்து வரும் மனையில், தங்கள் செலவில் கட்டிடம் கட்டி சமயபுரம் ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்திற்கு முடி காணிக்கை செலுத்த வரும் பக்தர்களுக்கு முடி எடுத்து வந்து கொண்டிருப்பதாக காட்டப்பட்டுள்ளது.

(5.30) மேலும் வா.சா.ஆ.7ல், அதில் ஒரு பகுதி மனையை சமயபுரம் ஸ்ரீமாரியம்மன் ஆலயத்திற்கு யானை மஹால் கட்ட முன்பே விட்டுக்கொடுத்துள்ளதாகவும், சமயபுரம் ஸ்ரீமாரியம்மன் கோயில் நிர்வாகிகள் தற்சமயம் வந்து கொண்டிருக்கும் பெருமளவு பக்தர்கள் சௌகரியமாக முடி எடுத்துக்கொள்ள வசதியாக நவீன முறையில் கட்டிடம் கட்ட உத்தேசித்து மேற்படி இடத்தை கோருவதால் தங்களுக்குச் சொந்தமான ஜாகாவில் கீழ்கண்ட ஷெட்டியூலில் கண்ட ஒரு பகுதி மனையை சமயபுரம் ஸ்ரீமாரியம்மனுக்காக மேற்படி ஆலய நிர்வாக அலுவலர் அவர்கள் மூலமாக தானமாக கொடுப்பதாக காட்டப்பட்டுள்ளது.

(5.31) மேலும் வா.சா.ஆ.7 நன்கொடை ஆவணத்தில் தங்களால் தானமாக கொடுக்கப்படும் மனையில் சேவார்த்திகளுக்கு முடி எடுக்க மட்டுமே உபயோகித்துக் கொள்ள வேண்டும், மற்ற உபயோகத்திற்கு மேற்படி மனையை உபயோகித்துக் கொள்ளக்கூடாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டு இந்த தான சாசனம் செய்யப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. அதனை பி.சா.1ம் தனது சாட்சியத்தில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:56:13 +0530

(5.32) மேலும் பி.சா.1 தனது சாட்சியத்தில், பிரதிவாதி கோவில் சொத்து தொடர்புடைய ஆவணங்களை வாங்கும் பொழுதும், ஆவணத்தை படித்து பார்த்து சரியாக இருந்தால் மட்டுமே வாங்கி வைப்போம் என்றால் சரிதான் என்று முதலில் கூறிவிட்டு, பின்னிட்டு சரியல்ல என்று பி.சா.1 முரணாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே பி.சா.1 மேற்படி சங்கதி குறித்து தெளிவில்லாமல் உள்ளார் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

(5.33) மேலும் பிரதிவாதி கோவில் தரப்பில் கூறியுள்ளதை ஒரு பேச்சிற்காக ஏற்றுக்கொண்டாலும், வழக்கு சொத்தை பொறுத்து பி.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தி கொடுக்கப்பட்ட பிறகு, அதே சொத்தை பொறுத்து ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.7 நன்கொடை ஆவணத்தை பிரதிவாதி திருகோவில் அலுவலர் எவ்வாறு பெற்றார் என்று பிரதிவாதி விளக்கவில்லை.

(5.34) மேலும் பிரதிவாதி தரப்பில் கூறுயுள்ளது போல 21.04.1911 தேதிய கிரைய ஆவண கிரையதாரர்களின் வாரிசுகளான காத்தான், பண்டிதன், ரெங்கசாமி பண்டிதன் மற்றும் செங்கையா பண்டிதன் ஆகியோர் 28.02.1931ல் அதனை பதிவு டிரான்ஸ்பர் பத்திரத்தின் மூலம் அருள்மிகு மாரியம்மன் திருகோவிலுக்கு பாத்தியப்படுத்தி, அதன் அனுபவத்தில் விட்டுவிட்டனர் என்றால் அதற்கு பிறகு வழக்கு சொத்துக்களுக்குரிய சொத்துவரி ரசீது வா.சா.ஆ.3, 4 மற்றும் 13 ஆகியவை ஏன் மிராசு நாவிதர்கள் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது என்று பிரதிவாதி தரப்பில் விளக்கப்படவில்லை.

(5.35) ஆனால் மேற்படி ஆவணங்கள் மூலம் வழக்கு சொத்துக்களின் உரிமை வழங்கப்படாமல், குறிப்பிட்ட உபயோகத்திற்கான பயன்பாட்டிகான அனுபவ உரிமை மட்டுமே பிரதிவாதி திருகோவிலுக்கு வா.சா.ஆ.7 மூலம் வழங்கப்பட்டுள்ளதாலேயே அதற்கான சொத்து வரி ரசீது வழக்கு தாக்கல் செய்த காலத்திற்கு முன்பு வரை அதாவது 2012ல் மிராசு நாவிதர்கள் பெயரில் உள்ளது என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் பிரதிவாதி தரப்பில் தாவா A அட்டவணைச் சொத்து குறித்து எவ்வித உரிமையும் கோரவில்லை.

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:56:21 +0530

(5.36) எனவே தாவா A அட்டவணைச் சொத்து வாதிகள் அனுபவத்தில் உள்ளது என்றும், தாவா A அட்டவணைச் சொத்தைப் பொறுத்து வாதிகள் கோரியபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றும், தாவா B அட்டவணைச் சொத்தைப் பொறுத்து 22.06.1977 தேதியில் நிபந்தனையுடன் கூடிய தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தியுள்ளனர் என்றும் **எழுவினாக்கள் 1 முதல் 3** ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

(5.37) மேலும் தாவா B அட்டவணைச் சொத்து பிரதிவாதிகளுக்கு குறிப்பிட்ட நோக்கத்தைத் தவிர வேறு நோக்கத்திற்கு பயன்படுத்த கூடாது என குறிப்பிட்டு நிபந்தனையுடன் நன்கொடை கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பிரதிவாதி தற்போது தாவா B அட்டவணைச் சொத்தை அலுவலக பயன்பாட்டிற்காக மாற்ற முயற்சிப்பதாக வாதிகள் தரப்பில் கூறியுள்ளனர். அதனை பிரதிவாதியும் தனது சாட்சியத்தில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

(5.38) இந்நிலையில் வாதிகள் தரப்பில் நன்கொடை ஆவணம் குறித்து ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக நிபந்தனையுடன் வழங்கப்படும் நிலையில், மேற்படி நிபந்தனை மீறப்பட்டால் மேற்படி நன்கொடை ஆவணத்தின் நோக்கம் நிறைவேறாமல் போய்விடுவதாக கீழ்கண்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் W.P.No.23037/2014 and M.P.Nos.1 to 3/2024, K.T.Balamanikandan Vs.The District Collector Cuddalore District, Cuddalore and 5 others, dated 13.03.2015 என்ற வழக்கு மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

(5.39) மேற்படி வழக்கில் ஊராட்சி ஒன்றியம் ஒரு நிலத்தை அளந்து அதனை மேற்படி தங்களது அலுவலக கட்டிடத்தை கட்ட மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டு அரசுக்கு நன்கொடை வழங்கியுள்ளது. ஆனால் அரசு அதனை கருவூலகதுறைக்கு எவ்வித அறிவிப்புமின்றி ஒப்படைக்க முடிவெடுத்ததால் அதனை எதிர்த்து மேற்படி ஊராட்சி ஒன்றியம் தாக்கல் செய்த நீதிபேராணை மனு உத்தரவில், ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக நிபந்தனையுடன் வழங்கப்படும் நன்கொடை, மேற்படி நிபந்தனை மீறப்பட்டால்

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:56:31 +0530

அதன் நோக்கம் நிறைவேறாமல் போய்விடுவதாக கூறியுள்ளது.

(5.40) இவ்வழக்கில் வாதிகளின் மூதாதையர்கள் தாவா B அட்டவணைச் சொத்தை முடி காணிக்கை இடமாக மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டு மேற்படி 22.06.1977 தேதிய நன்கொடை ஆவணம் வா.சா.ஆ.7 ஐ பிரதிவாதி கோயிலுக்கு கொடுத்துள்ள நிலையில், பிரதிவாதி திருக்கோயில் நிர்வாகம் அதனை அலுவலக பயன்பாட்டிற்காக மாற்ற முயற்சிப்பதால், மேற்படி நன்கொடை ஆவணத்தின் நோக்கம் அற்று போய்விடுகிறது.

(5.41) எனவே மேற்படி வழக்கின் பொருண்மை இவ்வழக்கிற்கும் பொருந்துவதாகவே அமைகிறது. எனவே தாவா B அட்டவணைச் சொத்தை 22.06.1977 தேதிய தான பத்திரத்தில் குறிப்பிட்ட நோக்கத்தைத் தவிர வேறு நோக்கத்திற்கு பயன்படுத்த கூடாது என வாதிகள் கோரியபடி நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றும், **எழுவினா 4**ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

6. <u>எழுவினா 5ற்கான தீர்வு</u>

5.	செலவுத்தொகையும், இதர பரிகாரமும் என்ன?

எழுவினாக்கள் 1 முதல் 4ற்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், வேறு எந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கதக்கதல்ல என்றும், வழக்கின் சூழ்நிலை மற்றும் தன்மையை கருத்தில் கொண்டு, வழக்கு செலவுத் தொகையை, பிரதிவாதி வாதிகளுக்கு செலுத்த வேண்டும் என்றும் எழுவினா 5ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியாக,

1) தாவா A அட்டவணை சொத்தில் வாதிகள் அமைதியான முறையில் சுவாதீனம் இருந்து அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ, பணியாட்களோ, எந்நாளும் எவ்வகையிலும்,

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:56:39 +0530

எக்காலத்திலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும்,

2) பிரதிவாதியோ, அவர்து ஆட்களோ, முகவர்களோ, பணியாட்களோ, எந்நாளும் எவ்வகையிலும், எக்காலத்திலும் தாவா B அட்டவணை சொத்தை 22.06.1977 தேதிய நன்கொடை ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள பயன்பாட்டை தவிர, அலுவலக இடமாக மாற்றவோ அல்லது வேறு எதற்காகவும் பயன்படுத்தக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும்,

3) வாதிகளின் வழக்கு செலவுத்தொகையுடன் முழுமையாக அனுமதிக்கப்பட்டு, தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:56:46 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

வாதிகள் தரப்பு சாட்சி :

வா.சா.1 – திரு.செல்வராஜ் (1ம் வாதி)

வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :

வ.எண்.	ஆவணங்களின் விவரம்
வா.சா.ஆ.1	தாவா சொத்தை பொறுத்த மாதிரி வரைபடம் – அசல்
வா.சா.ஆ.2	29.05.1911ம் தேதியில் சின்னக்கண்ணு பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் – அசல்
வா.சா.ஆ.3	தாவா சொத்திற்குண்டான சொத்து வரி ரசீது (எண்ணிக்கை – 3) – அசல்

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:57:01 +0530

வா.சா.ஆ.4	எஸ்.கண்ணனூர் பஞ்சாயத்து கொடுத்த அறிவிப்பு – சார்வு நகல்
வா.சா.ஆ.5	தாவா சொத்திற்குண்டான மின் அட்டை – அசல்
வா.சா.ஆ.6	தாவா சொத்திற்குண்டான மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை – 3) – அசல்
வா.சா.ஆ.7	22.061977 ம் பிரதிவாதி கோரியிட்டு கொடுத்த நன்கொடை ஆவணம் – அசல்
வா.சா.ஆ.8	2017 ஆண்டிற்கான பத்திரிக்கை – அசல்
வா.சா.ஆ.9	2018 ஆண்டிற்கான பத்திரிக்கை – அசல்
வா.சா.ஆ.10	12.04.2002 ல் அ.ம.எண்.32/2001 ல் இ.ம.எண்.2/2002 இந்து சமய அறநிலைய துறை இணை ஆணையர் பிறப்பித்த உத்தரவு
வா.சா.ஆ.11	திருச்சிராப்பள்ளி சார்பு நீதிமன்ற அ.வ.எண்.72/1986 வழக்கின் 29.10.1986 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை – நீதிமன்ற சான்றிட்ட நகல்
வா.சா.ஆ.12	திருச்சிராப்பள்ளி சார்பு நீதிமன்ற அ.வ.எண்.72/1986 வழக்கில் பிரதிவாதி திருக்கோவில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை – நீதிமன்ற சான்றிட்ட நகல்
வா.சா.ஆ.13	23.12.2023 தேதியிட்ட கதவு எண்.1, 1/1, 1/2, S.T.4 தெற்கு ரதவீதி, ஆகியவற்றிற்கான சொத்துவரி ரசீதுகளின் எண்ணிக்கை–3 – அசல்

பிரதிவாதி தரப்பு சாட்சிகள் :

பி.சா.1 – திரு.ரெங்கநாதன் (கோவிலின் எழுத்தர்)

பி.சா.2 – திரு.பாபு (இளநிலை உதவியாளர், அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் சமயபுரம்)

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:57:12 +0530

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>

வ.எண்.	ஆவணங்களின் விவரம்
பி.சா.ஆ.1	28.02.1931ம் தேதியிட்ட உரிமை மாற்று ஆவணம் (Transfer deed) ஸ்ரீரங்கம் சார்பதிவக ஆவண எண்.339/1931 – சார்பதிவக சான்றிட்ட நகல்

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI
Date: 2025.09.26 18:57:23 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.